செய்தி வெளியீடு எண் 13 நாள்.05.01.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் வர்தா புயலால் வீடுகள்,விவசாயப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆவடி வட்டத்தில் 2047 நபர்களுக்கு ரூபாய். 90 லட்ச்சத்து 49 ஆயிரத்து 237 கான நிவாரண தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் வர்தா புயலால் வீடுகள்,விவசாயப் பயிர்கள் சேதமடைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆவடி வட்டத்தில் 2047 நபர்களுக்கு ரூபாய். 90 லட்ச்சத்து 49 ஆயிரத்து 237 கான நிவாரண தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் வழங்கிய நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.01.2017) நடைபெற்றது.

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகினங்க வர்தா புயல் பாதிப்புப் ஏற்பட்ட உடன் போர்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் முடிக்கப்பட்டது பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு பெருமக்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்கள் மேற்பார்வையில் பாதிப்புகள் சரி செய்யப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பினர்.

புயலால் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு நிவாரணத் தொகையாக இன்று 1987 நபர்களுக்கு ரூபாய். 81 லட்ச்சத்து 65 ஆயிரத்து 600 கான ஆணைகள் வழங்கப்படுகிறது. கால்நடைகளை இழந்த 4 நபர்களுக்கு 92 ஆயிரத்துக்கான நிவாரணத் தொகைகளையும் மற்றும் விவசாய பயிர் சேத்ததிற்கு ரூபாய். 7 லட்ச்சத்து 91ஆயிரத்து 637 கான ஆணைகள் வழங்கப்படுகிறது என்று கூறினார்.

பொங்கல் திருவிழாவை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ். ஜெயச்சந்திரன், வட்டாட்சியர்.பெ. பாபு, துணை வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~